இனிமையான குழந்தைகளே! நீங்கள் லௌகீக, அலௌகீக குடும்பத்திற்கான கடமையை நிறை வேற்ற வேண்டும். ஆனால் யாரிடமும் மோகம் கொள்ளக் கூடாது. மோகத்தை வென்றவர் ஆக வேண்டும்.

கேள்வி: இது தீர்ப்பிற்கான நேரமாகும், எனவே தந்தையின் எந்தவொரு சிறந்த வழியை அனைவருக்கும் கூறிக் கொண்டே இருக்க வேண்டும்?

பதில்: தீர்ப்பிற்கான நேரத்திற்கு முன்னதாகவே தங்களது பாவங்களின் கணக்கு வழக்கை முடித்து கொண்டு விடுங்கள் என்ற தந்தையின் சிறந்த வழியை அனைவருக்கும் கூறுங்கள். தங்களது வருங்காலத்தை சிறந்ததாக ஆக்கிக் கொள்வதற்காக தந்தை மீது முழுமையாக சமர்ப்பணம் ஆகி விடுங்கள். தீர்ப்பிற்கு முன்னதாக ஞானம் மற்றும் யோகத்தினால் முக்தி, ஜீவன் முக்தியின் ஆஸ்தியைப் பெற்று கொண்டு விடுங்கள். முழு முயற்சியே இப்பொழுது தான் செய்ய வேண்டும். தந்தை மீது அனைத்தையும் சமர்ப்பணம் செய்தீர்கள் என்றால் 21 பிறவிகளுக்குக் கிடைத்து விடும். தந்தையினுடையவர் ஆன பிறகு ஒவ்வொரு அடியிலும் (டைரக்ஷன்) உத்தரவு பெற்றுக் கொண்டே இருங்கள்.

ஓம் சாந்தி. தந்தை வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். இப்பொழுது நீங்கள் 3 தந்தை யருடன் கடமையை நிறைவேற்ற வேண்டியுள்ளது. பக்தி மார்க்கத்தில் 2 தந்தையருடன் கடமையை நிறைவேற்ற வேண்டி இருக்கும். சத்யுகத்தில் இருக்கும் பொழுது ஒரு தந்தையுடன் கடமை முடிக்க வேண்டி இருக்கும். சரி தானே? கணக்கு புத்தியில் பதிகிறதா? யாருடையவராக ஆக வேண்டி உள்ளதோ, அவருடன் கடமையை முடிக்க வேண்டியும் இருக்கும். எனவே லௌகீக குடும்பத்தினருடன் கூட கடைசிவரை கடமையை நிறைவேற்ற வேண்டி உள்ளது என்று தந்தை கூறுகிறார். யாராவது லௌகீக உறவினருக்குக் கடிதம் எழுதுகிறீர்கள் என்றால் அது தபால் நிலையம் வழியாகப் போகிறது. இங்கு கூட எல்லையில்லாத தந்தைக்கு சிவபாபா ஈ/ர் பிரம்மா என்று கடிதம் எழுதுகிறீர்கள். இந்த விஷயங்களை உங்களைத் தவிர வேறு யாரும் புரிந்து கொள்வ தில்லை. இங்கு யாராவது புதிய மனிதர் வந்து அமர்ந்திருக்கும் பொழுது பாபா உனக்கு 3 தந்தையர் இருக்கிறார்கள் என்று கூறினால் அவரால் புரிந்து கொள்ள முடியாது. ஒன்று லௌகீக தந்தை ஆவார். இரண்டாவது இந்த சங்கமயுக அலௌகீக தந்தை, மேலும் மூன்றாவது பரலோகத் தந்தையோ அனைவருக்கும் இருக்கவே இருக்கிறார். பக்தி மார்க்கத்தில் கூட இருக்கிறார். பின் இப்பொழுதும் இருக்கிறார். இது யாருக்குமே தெரியாது. அவருக்கு பாடல் பூஜை மட்டும் செய் கிறார்கள். குழந்தைகளாகிய நீங்கள் மூன்று தந்தையரினு டையதுமே வாழ்க்கை வரலாற்றை அறிந்துள்ளீர்கள். எவ்வளவு விஷயங்களைப் புரிய வைக்க வேண்டி உள்ளது.

சத்யுகத்தில் எல்லோரும் சத்கதியில் இருக்கிறார்கள். சுகமே சுகம் உடையவர்களாக இருப்பார்கள். எல்லோரும் சுகதாமம், சாந்தி தாமத்தில் இருப்பார்கள். இராவண இராஜ்யத்தில் எல்லோருமே துக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். தேவதைகள் வாம மார்க்கத்தில் செல்லும் பொழுது விழ முற்படுகிறார்கள். தங்க துவாரகை தண்ணீருக்குக் கீழே சென்று விட்டதாகக்

காண்பிக்கிறார்கள். இந்த சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. புதியது மேலே வந்து விடும். ஆக பழையது பின்னர் கீழே சென்று விடும். பிறகு சத்யுகம் கீழே சென்று விடும், பின் கலியுகம் மேலே வந்து விடும். மீண்டும் சத்யுகம் மேலே எப்பொழுது வரும்? 5 ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு. குழந்தைகளின் புத்தியில் இந்த முழு ஞானம் வந்து விட்டுள்ளது. ஞானமோ சுலபமாகும். யோகத்தின் உழைப்பு மட்டும் செய்ய வேண்டி உள்ளது. ஒரு சிலர் அதிகமாக நினைவு செய்கிறார்கள். ஒரு சிலர் குறைவாக நினைவு செய்கிறார்கள். எனவே லௌகீக உறவினர்களுடன் கூட கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று தாய் தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார்கள். இன்று இல்லை யென்றால் நாளைக்கு அவர்களுடைய புத்தியிலும் பதிந்து விடும். இதுவோ சரி தான் என்பதைப் பார்ப்பார்கள். ஒரு தந்தையை நினைவு செய்ய வேண்டும். எந்தவொரு சாது, சந்நியாசி, குரு ஆகியோரை நினைவு செய்யக் கூடாது. உயிரூட்டமுடையவர்களையும் நினைவு செய் கிறார்கள். பின் ஜடத்தையும் நினைவு செய்கிறார்கள். சத்யுகத்தில் யார் மீதும் மோகம் இருப்ப தில்லை. அங்கு மோகத்தை வென்றவர்களாக இருப்பார்கள். இங்கு அனைவர் மீதும் மோகம் இருக்கிறது. வித்தியாசம் உள்ளது அல்லவா? நாடகத்தில் ஒவ்வொரு யுகத்தின் பழக்க வழக்கம் தனித் தனியாகும். இது தந்தை வந்து புரிய வைக்கிறார். ஏனெனில், தந்தை தான் ஞானம் நிறைந்தவர் ஆவார். இவரும் தந்தை ஆவார். அவரும் தந்தை ஆவார். அவரும் படைப்பவர். இவரும் படைப்பவர். பிரம்மா மூலமாகப் படைக் கிறார். தத்து எடுக்கிறார். தத்து எடுப்பது என்றால் தன்னுடையவராக ஆக்குவது. சூத்திர தர்மத்தினர் லி யாருக்கு அநேக பிறவிகளுக்கும் கடைசியான பிறவியாக இருக்கிறதோ அவர்களை தந்தை தத்து எடுக்கிறார். குழந்தைகளாகிய நீங்கள் தந்தையை அறிந்து கொண்டு விட்டுள்ளீர்கள். மேலும் தந்தை மூலமாக சிருஷ்டி சக்கரத்தையும் அறிந்து கொண்டு விட்டுள்ளீர்கள். தந்தை மூலமாக என்ன ஆஸ்தி கிடைக்கிறது என்பதையும் அறிந்து விட்டுள்ளீர்கள். நீங்கள் பெரியவர்கள் ஆவீர்கள். புரிந்திருக்கிறீர்கள், அதனால் தான் தத்து எடுக்கப்பட்டவர்களாக ஆகிறீர்கள். புரியாமல் எப்படி தத்து எடுக்கப்பட்டவர் களாக ஆக முடியும்? யாருக்காவது தனக்கென்று குழந்தை இல்லை என்றால் இன்னொரு குழந்தையை தன்னுடையதாக ஆக்கிக் கொள்கிறார்கள். செல்வந்தருக்குத் தான் குழந்தை யாக ஆவார்கள். ஏழைக்கு குழந்தை ஆவார்களா என்ன? எனக்கு குழந்தைகள் வேண்டும் என்று தந்தை கூறுகிறார். அவசியம் தத்து எடுப்பார். யாரை முந்தைய கல்பத்தில் தத்து எடுத்தாரோ அவர்களைத் தான் தத்து எடுப்பார் என்பதையும் நீங்கள் அறிந்துள்ளீர்கள். எந்த பாகம் முந்தைய கல்பத்தில் நடந்ததோ, அதே செயல்கள் திரும்ப நடைபெற்று கொண்டே போகும். என்னுடையவர் களாக ஆகும் பொழுது அவர்களுக்கு கற்பிப்பேன். தந்தை மற்றும் வீட்டை நினைவு செய்யுங்கள். சுகதாமம் மற்றும் சாந்தி தாமத்தை நினைவு செய்வது மிகவும் சுலபமானது ஆகும். ஆனால் புத்தி மிகவுமே விசாலமானதாக இருக்க வேண்டும். சிறிய குழந்தைகளால் புரிந்து கொள்ள முடியாது. அவர்கள் பாபா பாபா (தந்தை) என்று கூறிக் கொண்டே இருப்பார்கள். வேறு யாரிடமும் போக மாட்டார்கள். இங்கோ எல்லாமே மறைமுகமான விஷயங்கள் ஆகும். அறிவும் இருக்கிறது லி புத்திக்கு பலம் கிடைக்கிறது. பலம் கிடைக்கும் பொழுது தங்கத் தினுடையவராக ஆகி விடுகிறார்கள். யாராவது பலவீனமாக இருந்தால் அவர்களுக்கு தங்கத்தின் கரைசலை பருகுமாறு செய்கிறார்கள். தங்கத்தின் தண்ணீர் கூட தயாரிக்கிறார்கள். இங்கோ உங்களுக்கு ஆன்மீக ஞானம்

கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஞானமே வருவாய் ஆகும். ஞானமோ எல்லோருக்கும் ஒன்றே தான் கிடைக்கிறது. பிறகு யார் எவ்வளவு முயற்சி செய்கிறார்களோ? இதில் குழம்ப வேண்டிய அல்லது பயப்பட வேண்டிய எந்த விஷயமும் கிடையாது. பாபா வினுடையவராக ஆக வேண்டும் அவ்வளவே! தந்தையின் ஆஸ்தியை நினைவு செய்ய வேண்டும். நாள் முழுவதுமோ நிரந்தர நினைவு செய்ய முடியாது. தொழில் ஆகியவையும் செய்ய வேண்டும். ஒரு சிலருக்கோ தொழில் ஆகியவை கூட இல்லை. பிறகும் நினைவு செய்ய முடியாமல் இருப்பார்கள். கர்மாதீத நிலை ஆகாதவரை முயற்சி (புருஷார்த்தம்) செய்து கொண்டே இருக்க வேண்டும். அந்த வாயு மண்டலம் தென்படும். இப்பொழுது காலம் நெருங்கிக் கொண்டே போகிறது என்று புரிந்து கொண்டு விடுவார் கள். நிறைய துக்கம் ஏற்படும் பொழுது பகவானை நினைவு செய்து கொண்டே இருப்பார்கள். சாவு முன்னால் தென்படும். உங்களிலும் கூட எனது வருவாய் குறைவாக உள்ளது என்று அனேகருக்கு தங்களது நிலை பற்றி தெரிய வந்து விடும். யோகம் இருந்தது என்றால், ஆத்மாவிலிருந்து துரு நீங்கிக் கொண்டே போகும். பிறகு பாபா கூட புத்தியின் பூட்டை தளர்ந்ததாகச் செய்து விடுவார். மனிதர்கள் நோய்வாய்ப்படும் பொழுது இறைவனை நினைவு செய்கிறார்கள். பயம் இருக்கும். எல்லோரும் அவர்களுக்கு இராமர் என்று கூறுங்கள், இராமர் என்று கூறுங்கள், என்று நினைவூட்டு கிறார்கள். ஒருவருக்கொருவர் எச்சரித்து முன்னேற்றத்தை அடைய வேண்டும். அப்படியின்றி கணவன் ஞானத்தில் நடக்கிறார், மனைவியை நடக்க வைக்காமல் இருப்பது அல்ல. இவர் பாதி பங்குதாரராக (ஹாஃப் பார்ட்னர்) இருக்கும் ஜோடி ஆவார். ஆனால் தற்காலத்தில் பாதி பங்குதாரர் என்று கூட நினைப்பது இலலை. ஒரு சிலர் மதிப்பு வைக்கிறார்கள். இல்லையென்றால் இந்த காலத்தில் எப்பேர்ப்பட்ட குழந்தைகள் வெளிப்படுகிறார்கள் என்றால் தந்தையின் சொத்தை இல்லாமல் காலி செய்து விடுகிறார்கள். தாயைக் கேட்பது கூட இல்லை. அங்கோ இது போன்ற விஷயங்கள் இருப்பது இல்லை. ஒரு பொழுதும் துக்கம் ஏற்படுவது இல்லை. இங்கு முதன் முதலாக துக்கம் தான் கிடைக்கிறது. நிச்சயதார்த்தம் செய்தார்களோ இல்லையோ, காமவாள் செலுத்தப்பட்டு விடுகிறது. தேவிகளுக்கு வாள் ஆகிய வற்றைக் காண்பிக் கிறார்கள். உண்மையில் இது ஞானத்தின் அலங்காரம் ஆகும். சுயதரிசன சக்கரம் கூட தேவதைகளுக்கு இல்லை. இது பிராமணர்களாகிய உங்களுடையது ஆகும். கதாயுதம் கூட உங்களுடைய அடையாளம் ஆகும். ஞானத்தின் கதாயுதத்தினால் நீங்கள் மாயை மீது வெற்றி அடைகிறீர்கள். மற்றபடி அங்கு இது போன்ற விஷயங்களின் அவசியம் இருப்ப தில்லை. அங்கு மிகவுமே ஆனந்தமாக இருப்பார்கள். தபஸ்யா செய்ய வேண்டிய அவசியம் கூட இருக்காது. அதுவோ தவத்தின் பலன் ஆகும். சூட்சும வதனத்தில் இருப்பவர் கள் ஃபரிஷ்தாக்கள் (சூட்சும தேவதை) ஆவார்கள். அது ஃபரிஷ்தாக்களின் உலகமாகும். இங்கு ஃபரிஷ்தாக்கள் இருப்பதில்லை. தேவதைகளுக்கு தேவதை என்றே கூறுவார் கள். அவர்கள் ஃபரிஷ்தா ஆவார்கள். மேலும் இங்கு இருப்பவர்கள் மனிதர்கள் ஆவார்கள். அனைவருடையதும் தனித் தனி பிரிவுகள் ஆகும். சத்யுகத்தில் தேவதைகள் ஆட்சி புரிகிறார்கள். அது பேசும் உலகமாகும். சூட்சுமவதனம் அசைவுகளின் உலகமாகும். உலகமும் 3 ஆகும். மூல வதனம், சூட்சும வதனம் மற்றும் ஸ்தூல வதனம். மூன்று உலகம் என்று கூறுகிறார்கள் அல்லவா? உங்கள் புத்தியில் இது நடைமுறையில் உள்ளது. மனிதர்களோ கேள்விப்பட்ட விஷயங் கள் படி நடக்கிறார்கள். இந்த உலகத்தின் சக்கரம்

எப்படிச் சுற்றுகிறது என்பதை நீங்கள் நல்ல முறையில் அறிந்துள்ளீர்கள். மூன்று உலகங்களை அறிந்துள்ளீர்கள். தந்தையைத் தவிர முதல், இடை, கடை பற்றிய இரகசியத்தை யாருமே கூற முடியாது. யாருமே திரிகாலதரிசி கிடையாது. மூலவதனத்தில் ஆத்மாக்கள் எங்கு எப்படி இருக்கிறார்கள் என்பது யாருக்காவது தெரியுமா என்ன? அங்கு ஆத்மாக்களின் விருட்சம் உள்ளது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். அங்கிருந்து வரிசைக் கிரமமாக வருகிறார்கள். ஆத்மாக்களாகிய, குழந்தைகளாகிய நாம் அனைவரும் சிவபாபாவின் மாலை ஆவோம். எப்படி பரம்பரையை அமைக்கிறார்கள். கிறித்தவர்கள் கூட மரம் அமைக் கிறார்கள். மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறார்கள். கிறித்துவின் பிறந்த நாளைக் கொண்டாடு கிறார்கள். இப்பொழுது நீங்கள் யாருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவீர்கள். நமது தர்ம ஸ்தாபகர் யார் என்பது மனிதர்களுக்குத் தெரியவே தெரியாது. மற்ற அனைத்து தர்ம ஸ்தாபனை செய்பவர்களின் கணக்கு வழக்குகளை எடுக்கிறார்கள். தேவி தேவதா தர்மத்தை யார் ஸ்தாபனை செய்தார் என்பது யாருக்குமே தெரியாது. தந்தை வந்து புரிய வைக்கிறார். பெரும்பான்மை தாய்மார்களினுடையது ஆகும். சக்திகளின் மதிப்பை அதிகரிக்க வேண்டும். அப்படியின்றி நாங்கள் புத்திசாலிகள் என்று நமக்கு தேக அபிமானம் வந்து விடக் கூடாது. இல்லை. பிறகும் மாதாவிற்கு மதிப்பு கொடுக்க வேண்டும். பெயரே பிரம்மா குமாரி விஷ்வ வித்தியாலயம் என்பதாகும். ஞான கலசத்தை தாய்மார்களின் சிரத்தில் வைக்கிறார். அவர்கள் கூர்மையாக இருக்கிறார்கள். சரஸ்வதியின் கையில் வீணை கொடுத்துள்ளார்கள். கிருஷ்ணர் மற்றும் சரஸ்வதியின் சம்பந்தம் பற்றி கூட தெரியாது. சரஸ்வதி பிரம்மாவின் மகள் ஆவார். இது கூட யாருக்காவது தெரிந்திருப் பது அரிதாக உள்ளது. ஒவ்வொரு விசயம் கூட நல்ல முறையில் புரிய வைக்கப்படுகிறது.

இந்த ஞான யோகம் இன்றி யாருமே முக்தி ஜீவன் முக்தியை அடைய முடியாது. மேலும் எல்லோரும் இதை படிக்கவும் மாட்டார்கள். ஒவ்வொருவரும் அவரது கணக்கு வழக்கை தீர்க்க வேண்டி உள்ளது. பாவத்திற்கு தண்டனையோ கிடைத்தே விடுகிறது. இப்பொழுது தீர்ப்பிற்கான நேரமாகும் என்பதை உலகத்தார் புரியாமல் உள்ளார்கள். உங்களுடைய எல்லா பாவங்களின் கணக்கு வழக்கு முடிந்து விடுகிறது. வருங்காலத்திற்காக எவ்வளவு சேமிப்பு செய்ய வேண்டும் என்றால், அது அரை கல்பம் வரை இருக்க வேண்டும். முழு முயற்சியும் இப்பொழுது செய்ய வேண்டும். எல்லாமே சமர்ப்பணம் செய்தீர்கள் என்றால் அதன் பலன் 21 பிறவிகளுக்குக் கிடைத்து விடும் என்று தந்தை கூறுகிறார். ஏழைகளால் சட்டென்று வியாபாரம் செய்து விட முடியும். யாரிடம் இலட்சம், கோடி இருக்கிறதோ அவர்களது புத்தியில் பதிய முடியாது. தந்தை எதையும் வாங்குவ தில்லை. நீங்கள் டிரஸ்டியாக இருந்து பராமரியுங்கள் என்று கூறுகிறார். ஸ்ரீமத்படி நீங்கள் நடவுங்கள். நானோ உயிருடனிருக்கிறேன். ஒரு சிலர் உயிருடன் இருக்கும் பொழுதே டிரஸ்டிக்கு கொடுத்து விடுகிறார்கள். திடீரென்று இறந்து விட்டால் சண்டை ஏற்பட்டு விடும் என்று நினைக்கிறார்கள். பாபா கூட உயிருடனேயே அமர்ந்துள்ளார். தந்தை யினுடையவராகி இது செய்யலாமா அல்லது வேண்டாமா என்று (டைரக்ஷன்) உத்தரவு பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார். தாராளமாக இப்படி செய்யலாம் என்று பாபா ஆலோசனை அளிப்பார். ஒவ்வொரு வருடைய மனநிலையைப் பொறுத்துள்ளது. ஒரு சிலர் உயில் கூட எழுதி வைத்து

விடுகிறார்கள். மோகம் கூட நிறைய பேரிடம் இருக்கிறது. யார் தன் காலிலே நிற்கக் கூடியவராக இருப்பாரோ அவருக்கும் கொடுத்து விடுவார்கள். தந்தையிடம் ஒரு சிலர் தந்திரசாலிகளும் இருக்கிறார்கள் லி குழந்தைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டு மீதம் தனக்காக வைத்துக் கொள்கிறார்கள். போதும், நாங்கள் இதன் மூலம் வாழ்கிறோம். இவ்வாறு கூட செய்கிறார்கள். இவரோ எல்லை யில்லாத தந்தை ஆவார். ஒவ்வொரு குழந்தையையும் அறிந்திருக்கிறார். நாடகத்தைப் பற்றியும் அறிந்திருக்கிறார். இதில் பைசாவின் அவசியம் இல்லை என்று புரிந்திருக்கிறார். அந்த இராணுவத்தில் அரசாங்கத்திற்கு நிறைய செலவு ஆகிறது. உங்களுடையது செலவு எதுவும் இல்லை. இரவு பகலுக்கான வித்தியாசம் உள்ளது. இந்த முழு சொத்து எல்லாமே முடிந்து போய் விடப் போகிறது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். எங்களுக்கு பூமியே புதியதாக சதோபிர தானமாக வேண்டும். இப்பொழுதோ தமோபிரதானமாக உள்ளது. இலட்சுமியை அழைக் கிறார்கள். அப்பொழுது சுத்தமான இல்லத்தில் தேவி வருகை தருவார் என்பதற்காக முழு வீட்டையும் சுத்தப்படுத்துகிறார்கள். தேவதைகள் இந்த பூமியில் பாதங்களை பதிப்ப தில்லை என்று பாபா புரிய வைத்துள்ளார். அது சாட்சாத்காரம் மட்டுமே செய்விக்கிறார். சாட்சாத்காரத்தில் (காட்சிகள் தெரிதல்) பாதங்கள் பூமியில் பதிகிறதா என்ன? மீரா கூட தியானத்தில் பார்த்து கொண்டிருந்தார். இங்கு எந்தவொரு தேவதையும் வர முடியாது. தேவதைகள் சத்யுகத்தில் இருப்பார்கள். கலியுகத் தில் பிறகு அவர்களுக்கு எதிராக இருக்கிறார்கள். தேவதைகள் மற்றும் அசுரர் களுக்கிடையே சண்டை கிடையாது. உண்மை யில் இது மாயையுடன் சண்டை ஆகும். யோக பலத்தினால் மாயை மீது வெற்றி அடையச் செய்பவர் அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் ஒரு தந்தை ஆவார். முதன் முதலில் இருப்பது ருத்ர மாலை ஆகும். அங்கு இந்த மாலையைப் பற்றி யாருக்கும் தெரியவே தெரியாது. பிராமணர்களின் மாலையோ அமைய முடியாது என்பதை நீங்கள் சங்கம யுகத்தில் தான் அறிந்துள்ளீர்கள். பின்னால் இருப்பது பிறகு விஷ்ணுவின் மாலை. இவை எல்லாமே விளக்கமான விசயங்கள் ஆகும். ஒரு சிலர் எங்களுக்கு தாரணை ஆவ தில்லை என்று கூறுகிறார்கள். நல்லது. ஒன்றும் பரவாயில்லை. தந்தையை நினைவு செய்வதோ சுலபம் தான் இல்லையா? எந்த தந்தையிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறதோ அந்த தந்தையை நீங்கள் எப்படி மறக்கிறீர்கள்? பலமான வருவாய் ஆகும். பிறகும் மாயை புத்தியின் யோகத்தை அகற்றி விடுகிறது. அலங்காரம் செய்து மகாராணியாக ஆக்கி விடும் அப்பேர்ப்பட்ட மணமகனை மறந்து விடுகிறார்கள். அரைகல்பம் மாயையின் இராஜ்யம் நடக்கிறது. இப்பொழுது நீங்கள் மாயை மீது வெற்றி அடைந்து உலகத்தை வென்றவராக ஆகிறீர்கள்.

இந்த முழு உலகம் எப்படி நடக்கிறது என்பது பற்றி நீங்கள் ஆரம்ப முதல் கடைசி வரை அறிந்துள்ளீர்கள். நாடகத்தைப் பார்த்து விட்டு வரும் பொழுது கடைசியில் இப்பொழுது இந்த காட்சி வரப் போகிறது என்பது தெரிய வந்து விடுகிறது. இதில் அப்படியில்லை. விநாடிக்கு விநாடி என்ன நடக்கிறதோ அது நாடகம் ஆகும் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். நாடகம் என்ற தண்டவாளத்தில் உறுதியாக இருக்க வேண்டும். எது நடந்து விடுகிறதோ அது நாடகம் ஆகும். அதிருப்திப் பட வேண்டிய எந்த விஷயமும் கிடையாது. யாராவது சரீரம் விட்டார் என்றால், அவர் போய் தனது பாகத்தை நடிக்க வேண்டி உள்ளது. ஒரு சரீரத்தை விடுத்து மற்றொன்றை எடுத்து விட்டார். உங்களது புத்தியில் இந்த சுயதரிசன சக்கரம்

சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும். நீங்கள் சங்கொலி எழுப்ப வேண்டும். தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். இந்த இலட்சுமி நாராயணர் பாரதத்தின் அதிபதியாக இருந்தார்கள் என்று கூறுவதற்கு கையில் படம் இருக்க வேண்டும். இப்பொழுது கலியுகம் ஆகும். மீண்டும் இராஜ்ய பாக்கியம் அளிக்க தந்தை வந்துள்ளார். பிரம்மா குமார் குமாரிகளாகிய நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். பாட்டனாரிடமிருந்து ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நீங்களும் பெற வேண்டும் என்றால் பெற்றுக் கொள்ளுங்கள். இது உங்களுடைய அழைப்பு ஆகும். பிறகு நிறைய பேர் வருவார்கள். விருத்தி ஆகிக் கொண்டே போகும். சிவஜெயந்தியின் பொழுது கூட நன்றாகவே சப்தம் ஏற்படும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. நாடகம் என்ற தண்டவாளத்தின் மீது உறுதியாக இருக்க வேண்டும். எந்தவொரு விஷயத்திலும் அதிருப்தி அடையக் கூடாது. எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

2. ஒருவரையொருவர் எச்சரித்து முன்னேற்றம் அடைய வேண்டும். தொழில் ஆகியவை செய்யும் பொழுதும் தந்தையின் நினைவில் இருப்பதற்கான முயற்சி செய்ய வேண்டும்.

வரதானம் : சுக சொரூபமானவர் ஆகி அனைவருக்கும் சுகத்தை தரக்கூடிய மாஸ்டர் சுகத்தை அளிக்கும் வள்ளல் ஆகுக.

சுலோகன்: சங்கமயுக பிராமணர்கள் என்றால் துக்கத்தின் பெயர் அடையாளமே இருக்காது, ஏனெனில் சுகத்தை அளிப்பவரின் வள்ளலின் குழந்தைகளும் மாஸ்டர் சுகத்தை அளிக்கும் வள்ளலாகும். யார் மாஸ்டர் சுகத்தின் வள்ளலாக, சுக சொரூபமாக இருக்கிறார்களோ, அவர்கள் துக்கத்தில் எப்படி வர முடியும். புத்தியினால் துக்கத்தாமத்தை ஒதுக்கி விடுங்கள். அவர்கள் சுயமாகவே சுக சொரூபத் தில் இருப்பார்கள். மற்றும் மற்றவர்களுக்கும் கூட எப்பொழுதுமே சுகத்தை கொடுப்பார்கள். எப்படி பாபா ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சதா சுகத்தை தருகிறாரோ, அதுபோல எது பாபாவினுடைய செயலாக இருக்கிறதோ, அது குழந்தைகளுடைய செயலாகும். யாராவது துக்கத்தை கொடுத்தாலும் கூட நீங்கள் துக்கத்தை கொடுக்க முடியாது, ஏனெனில் உங்களுடைய சுலோகன் லி துக்கத்தை கொடுக்காதீர்கள், துக்கத்தை எடுக்காதீர்கள்.

சுலோகன்: புன்னகை மற்றும் கம்பீரத்தன்மை ஆவதற்கான சமநிலையை தாரணை செய்து ஒரே இரசனை என்ற மனநிலையில் நிலைத்திருங்கள்.